தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ரூ.50 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடைபெற்ற ஏலத்தில் ரூ.50 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் போனது.

இங்கு வாரதோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை ஏலம் நடைபெறுகிறது. சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு பெருந்துறை மற்றும் அதன் சுற்றுப் பகுதி விவசாயிகள் 1,347 மூட்டைகளில் 66 ஆயிரம் கிலோ கொப்பரையை கொண்டு வந்திருந்தனர். இதில் முதல் தர கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 75.75-க்கும், அதிகபட்சமாக ரூ. 78.50-க்கும் விற்பனையானது. இரண்டாம் தர கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 46-க்கும், அதிகபட்சமாக ரூ. 75.55க்கும் ஏலம் போனது. மொத்தமாக ரூ. 50 லட்சத்துக்கு கொப்பரை விற்பனை நடைபெற்றது.

### பவானியில் கால்நடைகளுக்கு சலுகை விலையில் வைக்கோல்

கால்நடைகள் வளர்க்கும் விவசாயிகள் மற்றும் பொது மக்களுக்கு சலுகை விலையில் வைக்கோல் விற்பனை செய்யும் உலர் தீவனக் கிடங்கு திறப்பு விழா, பவானி வர்ணபுரம் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஈரோடு மாவட்ட கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பி.ஜெயராமன் தலைமை வகித்தார். இக் கிடங்கைத் திறந்துவைத்த பவானி எம்எல்ஏ பி.ஜி. நாராயணன், முதல் விற்பனையைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், வறட்சியால் தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டு, பால் உற்பத்தி குறைவைத் தடுக்கவும், கால்நடைகள் விற்பனை செய்வதைத் தடுக்கவும் இக் கிடங்கு திறக்கப்பட்டுள்ளது.

உலர் தீவனக் கிடங்குகள் தமிழகத்தில் ரூ.12.5 கோடி செலவில் 125 இடங்களில் திறக்கப்படுகின்றன. ஈரோடு மாவட்டத்தில் தலா ரூ.10 லட்சம் செலவில் பவானி,

பெருந்துறை, எழுமாத்தூர், நம்பியூர் மற்றும் பொலவக்காளிபாளையத்தில் தீவனக் கிடங்குகள் திறக்கப்படுகின்றன. ஒரு கால்நடைக்கு நாளொன்றுக்கு 3 கிலோ வீதம் 7 நாட்களுக்கு 21 கிலோவும், அதிகமாக 5 கால்நடைகளுக்கு 105 கிலோ வைக்கோல் வழங்கப்படுகிறது. சந்தையில் ரூ.10-க்கு விற்கப்படும் வைக்கோல் இங்கு ரூ.2-க்கு தொடர்ந்து 3 மாதங்களுக்கு விற்கப்படும். மேலும், கால்நடைகள் வைத்துள்ளோர் அருகாமையில் உள்ள தீவனக் கிடங்கை அணுகிப் பெற்றுக் கொள்ளலாம் என்றார். முன்னதாக, கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி துணை இயக்குநர் கே.பிரகாசம் வரவேற்றார். உதவி இயக்குநர் ஏ.முருகன் திட்டம் குறித்து விளக்கினார். உதவி இயக்குநர் டி.பழனிச்சாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**திருச்செங்கோடு கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய மஞ்சள் வரத்து அதிகரிப்பு**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் சனிக்கிழமை நடைபெற்ற மஞ்சள் ஏலத்துக்கு புதிய மஞ்சள் அதிகமாக வந்தன.

விற்பனை சங்கத்துக்கு மொத்தம் 1200 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்தது. ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சளைக் கொண்டு வந்திருந்தனர்.

புதிய மஞ்சள் வந்ததை முன்னிட்டு, ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் சங்கத் தலைவர் ரவிசங்கர் தலைமையில் சிறப்பு பூஜை நடைபெற்றது. இதில், விவசாயிகள், வியாபாரிகள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

புதிய மஞ்சளை வாங்க ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 30-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர். ஏலம் மூலம் ரூ. 60 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.6500 முதல் ரூ.7658 வரையும், கிழங்கு ரகம் ரூ. 5560 முதல் ரூ. 6559 வரையும், பனங்காளி ரகம் ரூ.9000 முதல் ரூ. 10060 வரையும் விற்பனையானது. மஞ்சளுக்கு கூடுதல் விலை ரூ.1000 முதல் ரூ.1500 வரை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இதைச் சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார்.

**ஏரிகளுக்கு தண்ணீர் திறந்துவிட உத்தரவு: விவசாயிகள் மகிழ்ச்சி**

பாலேகுளி ஏரியிலிருந்து தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டதை அடுத்து, சனிக்கிழமை விவசாயிகள் இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

போச்சம்பள்ளி வட்டம், பாலேகுளி ஏரியில் இருந்து புதிய கால்வாய் அமைக்கும் திட்டத்துக்கு முதல்வர் ஜெயலலிதா ரூ. 6.50 கோடி ஒதுக்கினார். இந்தத் திட்டத்தின் கீழ், கால்வாய் அமைக்கும் பணி நிறைவுபெற்றது. இந்தப் புதிய கால்வாய் மூலம் 28 ஏரிகள் நீர் வரத்தைப் பெற உள்ளன. இந்த ஏரிகளுக்கு கிருஷ்ணகிரி அணைக்கு வரும் உபரி நீரை பாலேகுளி ஏரி வழியாகத் திறந்துவிட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் போச்சம்பள்ளி வட்டத்துக்கு உள்பட்ட பாலேகுளி, நாகோஜனஹள்ளி, வீரமலை, விளங்காமுடி, வெப்பாலம்பட்டி, காட்டகரம் ஆகிய கிராமங்களில் உள்ள 334.60 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதியைப் பெற உள்ளன.

இதனால், மகிழ்ச்சியடைந்த இந்தப் பகுதி விவசாயிகள், அ.தி.மு.க. வினர் வீரமலை கூட்டுச் சாலையில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர். இதில், அ.தி.மு.க. இளைஞர் அணி ஒன்றிய அவைத் தலைவர் வேணுகோபால், ஊராட்சி மன்றத் தலைவர் நதியா காமராஜ், கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் சாந்தமூர்த்தி, கண்ணன், மதியழகன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**பண்ணை ஆலோசனை மையம்,சுயதொழில் தொடங்க விண்ணப்பிக்கலாம்**

காரைக்கால் வேளாண் துறையால் மானிய உதவி பெற்று தொழில் தொடங்க விண்ணப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் கா. மதியழகன் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வேலை கிடைக்காத வேளாண் பட்டதாரிகளிடமிருந்து பண்ணை ஆலோசனை மையம் மற்றும் சுயதொழில் தொடங்கிட புதுவை வேளாண் துறை மூலமாக ரூ. 3 லட்சம் மிகாமல் மானியம் அளிக்கப்படுகிறது.

மேலும், வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் ஓராண்டு வேளாண் பயிற்சி பெற்ற வேலையில்லா நபர்களிடமிருந்து சுயதொழில் தொடங்கி, நடத்திட ரூ. 75 ஆயிரம் மிகாமல் மானியம் அளிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்புவோர், திட்ட வழிமுறைகள் மறறும் விண்ணப்பப் படிவம் வேளாண் துறை இணையதளம்

ஹஞ்ழ்ண்.ல்ன்க்ன்ஞீட்ங்ழ்ழ்ஹ.ஞ்ர்ஸ்.ண்ய்

மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் அல்லது அந்தந்தப் பகுதி உழவர் உதவியகங்களில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் கூடுதல் வேளாண் இயக்குநர் (பயிற்சி வழி திட்டம்) காரைக்கால் அலுவலகத்தில் 10.2.2014-க்குள் வந்து சேர வேண்டும்.

### பறவைகள் கணக்கெடுப்பில் கிராம மக்கள் பங்கேற்பு

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குளங்களில் கூலைக்கடா, முக்குளிப்பான், அரிவாள் மூக்கன் போன்ற அரிய வகை பறவைகள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் பறவைகள் கணக்கெடுப்பில் கிராம மக்களும் பங்கேற்றனர்.

திருநெல்வேலி மண்டலத்துக்குள்பட்ட திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒவ்வொரு மாதமும் 4-ஆவது ஞாயிற்றுக்கிழமை பறவைகள் கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஜன. 26ஆம் தேதி குடியரசு தினமாக இருப்பதால் சனிக்கிழமை (ஜன. 25) திருநெல்வேலி மாவட்டத்தில் கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

நயினார்குளம், வாகைகுளம், கூந்தன்குளம், ராஜவல்லிபுரம், சாரல்குளம், மரிச்சுபட்டி குளம், வடக்கு விஜயநாராயணம், பிரான்சேரி குளம் உள்பட 10-க்கும் மேற்பட்ட குளங்களில் கணக்கெடுப்பில் ஈடுபட்டனர்.

3-ஆவது கட்ட இக்கணக்கெடுப்பில் மேற்கண்ட குளங்களில் நூற்றுக்கணக்கான கூலைகடா, முக்குளிப்பான், செங்கல்நாரை, வரித்தலை வாத்து, புள்ளிமூக்கு வாத்து, செண்டு வாத்து, ஊசிவாத்து, அரிவாள் மூக்கன், பாம்புதாரா மற்றும்

கொக்கு வகைகள் உள்பட பல்வேறு அரிய வகை பறவையினங்கள் இருப்பது தெரியவந்தது.

பறவைகள் குறித்த விழிப்புணர்வு காரணமாக இக்கணக்கெடுப்பில் கிராம மக்களும் பங்கேற்றனர். இதுதவிர தென்காசி அருகே சுந்தரபாண்டியபுரம் குளத்தில் முதல் முறையாக பூநாரை என்ற பறவை இனம் இருப்பது கண்டறியப்பட்டது. தூத்துக்குடியில் நடைபெற்ற கணக்கெடுப்பில் சனிக்கிழமை மண்டல வனப்பாதுகாவலர் ராகேஷ்குமார் டோக்ரா பங்கேற்றார். 4-ஆவது கட்ட கணக்கெடுப்பு பிப். 23 ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் என மாவட்ட வன அலுவலர் சி.ஹெச். பத்மா வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**விலையில்லா ஆடு, மாடுகள்: கால்நடைத் துறை அதிகாரி ஆய்வு**

திருநாவலூர் ஒன்றியம் களமருதூர் கால்நடை மருந்தக பகுதிகளில் வழங்கப்பட்டுள்ள விலையில்லா கறவை மாடு மற்றும் ஆடுகளை கால்நடை பராமரிப்புத் துறை தலைமை அலுவலக துணை இயக்குநர் ஏ.வி.கிருஷ்ணன் சனிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

களவனூர், காம்பட்டு, பா.கிள்ளனூர், டி.ஒரத்தூர் ஆகிய கிராமங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது விழுப்புரம் மண்டல இணை இயக்குநர் தேவராஜ், கால்நடை அபிவிருத்தி மற்றும் தீவனப் பெருக்க துணை இயக்குநர் அப்சல், திருக்கோவிலூர் கோட்ட உதவி இயக்குநர் குபேந்திரன், திருவெண்ணெய்நல்லூர் கால்நடை மருத்துவர் இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

களமருதூர் கால்நடை உதவி மருத்துவர் சுரேஷ்குமார், மேற்கண்ட கிராமங்களில் கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கம் மற்றும் சிகிச்சைகளை அளித்தார். மேலும் அரசு மானியத்துடன் கூடிய கறிக்கோழி பண்ணைகளையும், கால்நடை தீவன வளர்ப்புப் பகுதிகளையும் அவர் பார்வையிட்டார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அஞ்சல் வழியில் பயிற்சி பெற கால்நடை பல்கலைக்கழகம் அழைப்பு

**ஈரோடு**: கால்நடை பண்ணை சார்ந்த அஞ்சல் வழி பயிற்சியில் கலந்து கொள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது.கால்நடை சார்ந்த தொழில்களில் கறவைமாடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, செம்மறி ஆடு வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு, முயல்வளர்ப்பு, இறைச்சி கோழி வளர்ப்பு, முட்டை கோழி வளர்ப்பு, ஜப்பானிய காடை வளர்ப்பு, வான்கோழி வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, கால்நடைகளுக்கான பசுந்தீவன உற்பத்தி முதலியவை உள்ளன.தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சேவை மனப்பான்மையோடு பண்ணையாளர்கள் மற்றும் நேரடியாக பயிற்சியில் கலந்து கொள்ள இயலாத இளைஞர்கள் மற்றும் மகளிரின் நலன் கருதி, பல்வேறு கால்நடை பண்ணை சார்ந்த அஞ்சல் வழிப்பயிற்சி திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

பயிற்சியில் சேர்ந்து பயன்பெற விரும்புவோர், கால்நடை வளர்ப்பில், அனுபவம் இருந்தால், எழுதப்படிக்கத் தெரிந்திருந்தால் போதுமானது அல்லது 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தால் போதும். இத்திட்டம் மூன்று மாதங்கள் நடைபெறுகிறது. தேவையான தொழில்நுட்பங்கள் தெளிவாகவும், முழுமையாகவும் கற்றுத்தரப்படும். பயிற்சி இறுதியில் நேர்முகப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.நேர்முகப்பயிற்சியில் ஒவ்வொரு பயிற்சி திட்டத்துக்கும், ஏற்ப பண்ணையிலேயே பயிற்சி வழங்கப்படும். பயிற்சியை முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

தற்போது நடைபெற்று வரும் பயிற்சிபற்றிய விழிப்புணர்வு மற்றும் ஊக்குவிப்பு பயிலரங்கம் இலவசமாக சென்னை, மாதவரம் பால் பண்ணையில் உள்ள பல்கலைக்கழகத்தின் உழவர் இல்லத்தில் ஜன., 31 முதல் நடக்கிறது.இவ்வாய்ப்பை பயனாளிகள் பயன்படுத்தி கொள்ள, ஈரோடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய உதவி பேராசிரியர்கள் மற்றும் தலைவர் யசோதை கேட்டுக்கொண்டுள்ளார்.

**"மாணவர்கள் விவசாயத்தில் சாதியுங்கள்' பள்ளி விழாவில் சப்-கலெக்டர் யோசனை**

**கோபிசெட்டிபாளையம்**: கோபி, தாசம்பாளையம் வெங்கடேஸ்வரா வித்யாலயா பள்ளியில் எஸ்.எஸ்.எல்.ஸி., மற்றும் பொதுத்தேர்வில், முதல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கு பொற்பதக்கங்கள் வழங்கும் விழா நடந்தது.

அந்தியூர் எம்.எல்.ஏ., ரமணீதரன் தலைமை வகித்தார். ஸ்ரீவெங்கடேஸ்வரா ஹைடெக் பொறியியல் கல்லூரி செயலாளர் கருப்பணன், வித்யாமந்திர் அறக்கட்டளை தலைவர் வெங்கடாசலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். எஸ்.வி.வி., கல்வி நிறுவனங்கள் செயலாளர் கெட்டிமுத்து வரவேற்றார்.பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர் பரிசுகள் வழங்கி, சப் கலெக்டர் சந்திரசேகர சகாமுரி, சியதாவது:கிராமப்புறத்தில் படித்து நான், முன்னேறி உள்ளேன்.

கிராமப்புற மாணவ, மாணவியர் படிப்பதோடு, பொது அறிவை வளர்த்து கொள்ள வேண்டும். இன்ஜினியரிங், டாக்டர் என அனைத்து துறைகளிலும், மாணவர்கள் சாதிப்பதுடன், மக்கள் சேவையில் ஈடுபட வேண்டும்.இந்தியாவின் வளர்ச்சி, கிராமத்தை நோக்கி உள்ளதாக, காந்தியடிகள் தெரிவித்தார்.
தற்போது கிராமத்தை சேர்ந்த மாணவர்கள், நகரத்தை நோக்கி உள்ளனர். வெளிநாட்டு பறவைகள், சீஸன் நேரத்தில் பறவைகள் சரணாயலத்து வருகின்றன. சீஸன் முடிந்தவுடன், தங்கள் சொந்த நாடுகளுக்கு திரும்பி விடுகின்றன.

அதுபோல், கிராமத்தை சேர்ந்த மாணவர்கள், படிப்பில் சாதிக்க நகரத்தை நோக்கி வர வேண்டும். விவசாய துறையில் சாதிக்க மீண்டும், கிராமத்தை நோக்கி செல்ல வேண்டும்.விவசாய துறையில் சாதித்தால் இந்தியா மேலும் வளர்ச்சியடையும், என்றார்.

## தர்பூசணி பழங்கள் அறுவடை சீசன். துவங்கியது :விலை படிப்படியாக அதிகரிக்க வாய்ப்பு

**கண்டமங்கலம்** : விழுப்புரம் மாவட்டத்தில் தர்பூசணி அறுவடை சீசன் துவங்கியது. முக்கியமான நகர பகுதிகளில் சாலையோரம் தர்பூசணி பழங்களை விற்பனைக்காக குவித்து வைத்துள்ளனர். விழுப்புரம் மாவட்டத்தில் கண்டமங்கலம், திருக்கோவிலூர் உள்ளிட்ட பகுதிகளிலும் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் தர்பூசணி சாகுபடி செய்யப்படுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் இந்த ஆண்டுக்கான அறுவடை துவங்கியுள்ளது.

கடந்த ஆண்டு தர்பூசணி பழங்கள் டன் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாய் முதல் அதிகபட்சம் 10 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டது. இந்தாண்டுக்கான அறுவடை துவங்கியுள்ள நிலையில் ஒரு டன் 7 ஆயிரம் ரூபாய் முதல், 7 ஆயிரத்து 500 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது.

கடந்தாண்டு அதிகபட்சமாக டன் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்ட நிலையில், இந்தாண்டு படிப்படியாக விலை உயர்வு ஏற்படுமென விவசாயிகளிடையே எதிர்பார்ப்பு உள்ளது.

மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகின்ற தர்பூசணி பழங்களை வியாபாரிகள், அந்தந்த பகுதியிலும் முகாமிட்டு கொள்முதல் செய்கின்றனர். முதல்தரமான பழங்களை டன் கணக்கில் வாங்கி சென்னை, திருச்சி, மதுரை, வேலூர் உள்ளிட்ட பெருநகரங்களுக்கு சப்ளை செய்கின்றனர். மேலும் புதுச்சேரி, கேரளா மற்றும் பெங்களூரு உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் பழங்களை அனுப்பி வருகின்றனர். இந்தாண்டு தர்பூசணி விளைச்சல் அமோகமாக உள்ளதாலும், விலை

அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாலும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வாழை, மிளகாய் பயிர் இன்சூரன்ஸ் பிரிமிய தொகை கட்ட கடைசி தேதி

**சிவகங்கை**:""சிவகங்கை, மாவட்டத்தில் வாழை, மிளகாய் சாகுபடி செய்த விவசாயிகள் பயிர் இன்சூரன்ஸ் செய்யலாம்," என, தோட்டக்கலை துணை இயக்குனர் இருளப்பன் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது; மாவட்டத்தில், ஆண்டுதோறும் சராசரியாக 500 எக்டேரில் வாழை, 3,500 எக்டேரில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. வறட்சி, வெள்ளம், பூச்சி தாக்குதல் மூலம், பாதிப்பு ஏற்பட்டால், மகசூல் குறைவிற்கு ஏற்ப, பயிர் இன்சூரன்ஸ் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ராபி பருவத்தில், பயிரிட்டுள்ள வாழை, மிளகாய் பயிருக்கு இன்சூரன்ஸ் செய்யலாம். வாழை பயிருக்கு, மானாமதுரை, இளையான்குடி, திருப்புவனம் வட்டாரத்தில், 14 வருவாய் கிராமங்களும், மிளகாய் பயிருக்கு இளையான்குடி, காளையார் கோவில், திருப்புவனம், எஸ்.புதுார் வட்டாரங்களில், 56 வருவாய் கிராமங்களில் பயிரிடுவதாக கணக்கிட்டுள்ளனர்.

இதில், வாழை பயிருக்கு, ஏக்கருக்கு அதிக பட்சம் ரூ.3 லட்சத்து 697 பெற, அரசு மானியம் போக, பிரிமியமாக
விவசாயி ரூ.11 ஆயிரத்து 93 கட்ட
வேண்டும். மிளகாய் பயிருக்கு,
ஏக்கருக்கு ரூ.10 ஆயிரத்து 855 இழப்பீடு பெற, ரூ.651 பிரிமியம் கட்டவேண்டும். மிளகாய் பயிரிட்ட விவசாயிகள் ஜன.,31க்குள்ளும், வாழை விவசாயிகள் பிப்.,28க்குள்ளும் பிரிமிய தொகையை செலுத்தவேண்டும், என்றார்.

## நாட்டுக்கோழி பண்ணை வளர்ப்பு திட்டம் கலெக்டர் ஆய்வு

**சிவகங்கை**:சிவகங்கையில், நாட்டுக்கோழி பண்ணை வளர்ப்பு திட்ட பணிகளை, கலெக்டர் ராஜாராமன் ஆய்வு செய்தார்.

சிவகங்கை அருகே கூட்டுறவுபட்டி, இடையமேலுார், குமாரபட்டி உள்ளிட்ட கிராமங்களில், கால்நடை பராமரிப்புத்துறை ஆலோசனையின் கீழ், பெண்கள் நாட்டு கோழிப்பண்ணை வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பண்ணைகளை ஆய்வு செய்தார்.
கலெக்டர் கூறுகையில்,"" மாவட்ட அளவில் நாட்டு கோழி பண்ணை அமைக்க, நடப்பு ஆண்டிற்கு 240
பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இப்பண்ணை அமைக்க ரூ.1.37 லட்சம் திட்ட மதிப்பீடு. இதில்,ரூ.34,250 மானியம்.
தற்போது, 98 பயனாளிகள் பண்ணை அமைத்துள்ளனர். இது தவிர, கறிக் கோழிப்பண்ணை அமைக்கவும்,
மானியம் வழங்கப்படுகிறது. 5 ஆயிரம் கறிகோழி வளர்க்க, தேவையான பண்ணை அமைக்க, ரூ.8.25 லட்சம் திட்ட மதிப்பீடு. இதில், ரூ.2.06 லட்சம் மானியம். இதில், 50 பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர், என்றார்.
கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் (பொறுப்பு) விஸ்வநாதன், உதவி இயக்குனர் சோமசுந்தரம், திட்ட பொறுப்பாளர் மணிவண்ணன்
பங்கேற்றனர்.

## வறட்சியிலும் லாபம் பெறும் வழியைத் தெரிஞ்சுக்கோங்க!

**மதுரை**:"மாற்றுப் பயிர் சாகுபடி செய்து, வறட்சியிலும் லாபம் பெறலாம்" என, விவசாய அதிகாரிகள் வலியுறுத்தி
வருகின்றனர்.
மதுரை மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததுடன், உணவு உற்பத்தியும் குறைந்ததால், அதிகாரிகள் மாற்றுப் பயிர் சாகுபடியை வலியுறுத்துகின்றனர்.
வறட்சி காலங்களில், குறைந்த நீர்தேவை, குறைந்த வயது, அதிகளவு சல்லிவேர்களைக் கொண்ட, கால்நடைகளுக்கு தீவனம் தரக்கூடிய, மண்வளம் சேர்க்கும் மாற்றுப் பயிர்களை சாகுபடி செய்வதே சிறந்தது. அவர்களது கருத்துப்படி, விற்பனை அதிகமுள்ள, நுகர்வோரின் விருப்பத்திற்கு ஏற்ப, காலத்தின் கட்டாயம் கருதி, தானிய மாற்றுப் பயிரை சாகுபடி செய்ய வேண்டும், என்கின்றனர்.

ஒரு ஏக்கர் நெல் சாகுபடிக்கு 1250 மி.மீ.,யும், கரும்பு மற்றும் வாழை சாகுபடிக்கு 1800 மி.மீ.,யும் நீர் தேவை. ஆனால், பயறு வகைகளுக்கு 400 மி.மீ.,யும், சோளம், கம்பு பயிருக்கு 500 மி.மீ.,யும், மக்காச்சோளத்திற்கு 600 மி.மீ., நீரும் போதுமானது.

அதாவது ஒரு ஏக்கர் நெல் சாகுபடிக்கான நீரைக் கொண்டு, மூன்று ஏக்கரில் பயறு வகைகளோ, இரண்டரை ஏக்கரில் சிறுதானியமோ சாகுபடி செய்யலாம். ஒரு ஏக்கரில் கரும்பு அல்லது வாழை சாகுபடிக்கான நீரைக் கொண்டு, நான்கரை ஏக்கரில் பயறு வகைகளோ அல்லது மூன்று ஏக்கரில் சிறுதானியமோ சாகுபடி செய்யலாம்.

விவசாயத்துறை இணை இயக்குனர் ஜெயசிங் ஞானதுரை கூறுகையில், "மாற்றுப் பயிர்கள் சாகுபடி மூலம் செலவு குறைவதுடன், லாபமும் அதிகம் பெறலாம்" என்றார்.

## கோழிக்கழிச்சல் தடுப்பு முகாம்; பிப்.,3 ல் துவக்கம்

**விருதுநகர்**: கோடைகாலம் துவங்க இருப்பதால், கோழிகளுக்கு ஏற்படும் வெள்ளைக்கழிச்சல் நோயை தடுக்கும் பொருட்டு, பிப்.,3 முதல் 16 வரை, இருவாரம், கோழிக்கழிச்சல் நோய் தடுப்பு மருந்து முகாம், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை மருத்துவ மனைகள், கால்நடை மருந்தகங்கள், மற்றும் கிளை நிலையங்களில் நடைபெற உள்ளது. இதில், ஒரு லட்சத்து பதினைந்தாயிரம் டோஸ் தடுப்பூசி மருந்துகள் போட, திட்டமிடப்பட்டுள்ளது.

முகாமினை, பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் கோழிப்பண்ணை உரிமையாளர்கள் பயன்படுத்தி, வெள்ளைக்கழிச்சல் நோயில் இருந்து, கோழிகளை பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென, கலெக்டர் ஹரிஹரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வேளாண் இடுபொருள்

**திருச்சுழி**:அருப்புக்கோட்டை அருகே எம். ரெட்டியபட்டி வேளாண் துறை மூலம், "அட்மா' திட்டத்தின் கீழ், திருந்திய நெல் சாகுபடி, கம்பு, மிளகாய், மக்காச்சோளம் பயிர்களில் செயல் விளக்க திடல்கள், பள்ளிமடம், முத்துராமலிங்கபுரம், பரளச்சி, ஆலடிபட்டி பகுதிகளில் அமைக்கப்பட்டன.
இதை அமைத்த விவசாயிகளுக்கு, பொட்டாஷ், யூரியா, அசோஸ்பைரில்லம் போன்ற 4 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள இடுபொருட்கள் வழங்கப்பட்டன. பயனாளிகளின் பங்குதொகையாக, 400 ரூபாய் பெறப்பட்டது. இடுபொருட்களை வேளாண் உதவி இயக்குனர் நாச்சியாரம்மாள் வழங்கினார். ஏற்பாடுகளை, தொழில்நுட்ப மேலாளர் பிரேமா மற்றும் அலுவலர்கள் செய்தனர்.

## பாசனத்துக்காக வாணியாறு அணையில் தண்ணீர் திறப்பு

**பாப்பிரெட்டிப்பட்டி**: பாப்பிரெட்டிப்பட்டி அடுத்த வாணியாறு அணையிலிருந்து, பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டது.பாப்பிரெட்டிப்பட்டி அடுத்த வாணியாறு அணையிலிருந்து, பாசனத்துக்காக தண்ணீர் திறப்பு நிகழ்ச்சி நடந்தது. கலெக்டர் விவேகானந்தன் தலைமை வகித்தார். எம்.எல்.ஏ., அன்பழகன், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அன்பழகன், யூனியன் சேர்மன் முருகன், துணை சேர்மன் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.அமைச்சர் பழனியப்பன், பாசனத்திற்காக, அணையிலிருந்து தண்ணீரை திறந்து வைத்தார். இதன் மூலம், 2014ம் ஆண்டு புதிய ஆயகட்டு பாசன பரப்பில், 8,550 ஏக்கர் நிலங்களும், பழைய ஆயக்கட்டு பாசன பரப்பில், 1,967 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகிறது.புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு, இடது மற்றும் வலது கால்வாய்கள் இரண்டு மண்டலங்களாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்திற்கும், ஆறு நாட்கள் வீதம், 12 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.பொதுப்பணிதுறை செயற்பொறியாளர் ஜெகநாதன், உதவி

பொறியளர் பாலசுப்பிரமணியன், கிருபா, பஞ்சாயத்து தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாநில பட்டு வளர்ச்சி தலைவர் மணிவண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நீலகிரியில் விளைந்த பனிக்கால தேயிலைக்கு கடும் கிராக்கி :கிலோ ரூ.350 க்கு விற்பனை

**ஊட்டி** : நீலகிரியில், பனிக்காலத்தில் விளைந்த உயர்ரக தேயிலை தூளுக்கு, தேயிலை சந்தையில் திடீர் கிராக்கி ஏற்பட்டதால், குன்னூர் தேயிலை ஏல மைய வரலாற்றில் முதன் முறையாக, ஒரு கிலோ "ஆர்தோடக்ஸ்' தேயிலை தூள் 350 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில், கடந்த நவம்பர் இரண்டாம் வாரம் துவங்கி, பனிப்பொழிவு இருந்து வருகிறது. குறிப்பாக, இம்மாதம் முதல் வாரத்தில், பல இடங்களில் "மைனஸ்' டிகிரி அளவுக்கு குறைந்தபட்சவெப்ப நிலை நிலவியது. தாழ்வான இடங்களில் உள்ள தேயிலை தோட்டங்கள் பனிப்பொழிவில் கருகி, பசுந்தேயிலை மகசூல் குறைந்தது.

ஆனால், இந்த பனிப்பொழிவு, உயரமான இடங்களில் உள்ள தேயிலை தோட்டங்களில் விளையும் பசுந்தேயிலைக்கு சாதகமாக அமையும்.

இக்காலகட்டத்தில் விளையும் பசுந்தேயிலை மூலம் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள், நிறம், மணம், திடம் போன்ற குணங்களை பெற்றிருக்கும் என்பதால், அவ்வகை தேயிலை தூளுக்கு வெளிநாடுகளில் கிராக்கி அதிகம்; குறிப்பாக, ஐரோப்பா, அமெரிக்க நாடுகளில் வசிப்போர் பனிக்காலங்களில் விளையும் உயர்ரக தேயிலை தூளை அதிகம் வாங்கி, பருகுகின்றனர்.

இத்தகைய தேயிலை தூளுக்கு தேயிலை சந்தையில் திடீர் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

குன்னூர் தேயிலை ஏல மையத்தில் இந்த வாரம் நடந்த தேயிலை ஏலத்தில், பனிக்காலத்தில் விளைந்த ஆர்தோடக்ஸ், சி.டி.சி., ரக தேயிலை தூளுக்கு கிராக்கி அதிகரித்தது. ஏலத்தில், மொத்தம் 12.15 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது; அதில், 83 சதவீத தேயிலை தூள் விற்கப்பட்டது. இதில், குன்னூர் ஐபீல்டு தேயிலை தொழிற்சாலையின் "ஆர்தோடக்ஸ்' தேயிலை தூளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 350 ரூபாய் விலை

கிடைத்தது. குன்னூர் தேயிலை ஏல மையத்தின் 50 ஆண்டுகால செயல்பாட்டில், இந்தளவு விலை கிடைத்தது, இதுவே முதல் முறை. அதே போன்று, கோத்தகிரி கோடநாடு தேயிலை தொழிற்சாலையின் "ஆர்தோடக்ஸ்' ரக தேயிலை தூள், கிலோ 300 ரூபாய்க்கு விலை போனது. சி.டி.சி., ரகத்தில், "ஹோம்டேல்', "கார்சில்' உட்பட சில தொழிற்சாலைகளின் உற்பத்திக்கு, கிலோ 200 ரூபாய்க்கு மேல் விலை கிடைத்தது.

தேயிலை சந்தையில், நீலகிரி பனிக்கால தேயிலை தூளுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கி, தேயிலை வர்த்தகர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## அணைகள் நீர்மட்டம் குறைவு

**பழநி:**பழநி பகுதியில் தொடர் மழை இல்லாததால், பாலாறு பொருந்தலாறு, வரதமாநதி அணை உட்பட ஆறு அணைகளிலும் நீர்மட்டம் குறைந்துவருகிறது. அணைகளின் நேற்றைய நிலவரம்: பாலாறு பொருந்தலாறு அணையில் 7 கன அடி நீர் வெளியேற்றப் படுகிறது. நீர்மட்டம் 34.78 அடி (உயரம் 65 அடி). குதிரையாறு அணையில் 23 கன அடி நீர் வெளி யேற்றப்படுகிறது.

நீர்மட்டம் 52.40 அடி (உயரம் 80 அடி), வரதமாநதி அணையில் 10 கன அடி குடிநீர் தேவைக்காக வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 63.02 அடி (உயரம் 67 அடி), பரப்பலாறு அணையில் 3 கன அடி குடிநீர் தேவைக்காக வெளியேற்ற படுகிறது. நீர்மட்டம் 55.93 அடி ( உயரம் 90 அடி).

கொடகனாறு அணையில் நீர்மட்டம் 2.10 அடியாக (உயரம் 27.4அடி) உள்ளது.

## ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் தக்காளி கிலோ ரூ.2

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வெளியூர் வியாபாரிகள் குறைந்த அளவே வாங்கியதால், தக்காளி விலை கிலோ ரூ.2க்கு வீழ்ச்சியடைந்தது. ஒட்டன்சத்திரத்தை சுற்றியுள்ள பகுதிகளில் தக்காளி அதிகமாக விளைவிக்கப்படுகிறது. இங்கு நாட்டு ரகங்களை விட, ஒட்டு ரகங்களே அதிகமாக

பயிரிடுகின்றனர். தற்போது பந்தலில் காய்க்கும் தக்காளி ரகங்களையே விவசாயிகள் விரும்பி நடுகின்றனர்.

ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் இருந்து, தக்காளி அனுப்பப்படும் ஒரு சில பகுதிகளில், தற்போது தக்காளி மகசூல் நடந்து வருகிறது. அந்தந்த பகுதிகளுக்கு தேவையான தக்காளியை வியாபாரிகள் அங்கேயே வாங்கி விடுகின்றனர். இதனால், இங்கு தக்காளி விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில், கடந்த சில நாட்களாக, தக்காளி கிலோ ரூ.5க்கு விற்றது. நேற்று வியாபாரிகள் குறைந்தளவே வந்ததால், தக்காளி கிலோ உ ரூபாய்க்கு விற்றது. 14 கிலோ கொண்ட தக்காளி பெட்டி ஒன்று, 30 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

வியாபாரி சண்முகம் கூறுகையில், "மாநிலத்தின் பல இடங்களில், உள்ளூர் தக்காளி வரத்து உள்ளதால், வெளியூர் வியாபாரிகள் குறைந்த அளவிலான தக்காளியை மட்டுமே வாங்கிச் செல்கின்றனர்," என்றார். தக்காளி விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## கொள்ளு அறுவடை துவக்கம்: விலை அதிகரிக்கும் என எதிர்பார்ப்பு

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மருத்துவ குணம் வாய்ந்த அறுவடை துவங்கியுள்ளது. கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் கொள்ளு பருப்பின் விலை அதிகரிக்கும் என்பதால் கொள்ளு பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கொள்ளு பயிர் தற்போது தமிழக அளவில் அதிக பரப்பில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பயிரிடப்படுகிறது. மாவட்டத்தில் சுமார், 1 லட்சத்து, 30 ஆயிரம் ஏக்கரில் கொள்ளு பயிர் சாகுபடி செய்யப்பட்டது.

குறிப்பாக மா அதிக பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சந்தூர், வேலம்பட்டி, போச்சம்பள்ளி, மத்தூர், பர்கூர், ஜெகதேவி, தொகரப்பள்ளி, அஞ்சூர், கல்லாவி, சூளகரை ஆகிய பகுதிகளில் மா தோட்டங்களில் ஊடுபயிராகவும், ஊத்தங்கரை, திருவனப்பட்டி, ஆனந்தூர், புலியூர் ஆகிய பகுதிகளில் மானாவாரி நிலங்களிலும் அதிக பரப்பில் கொள்ளு சாகுபடி செய்யப்படுகிறது.

கொள்ளு பருப்பில் புரோட்டின் சத்து, 30 சதவீதம் உள்ளது. கொழுப்பு சத்து மிக குறைவாக உள்ளதால் இதனை சர்க்கரை நோயாளிகள் அதிகம் பேர் பயன்படுத்துகின்றனர். பொதுவாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கொள்ளு சாம்பார், கொள்ளு ரசம் ஆகியவற்றை விரும்பி உண்பார்கள்.

பல்வேறு மருத்துவ குணம் வாய்ந்த கொள்ளு பயிரை ஏழைகளின் பயிர் என்று அழைப்பார்கள்.ஆண்டு தோறும் ஜனவரி, 15ம் தேதிக்கு மேல் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொள்ளு அறுவடை துவங்கும்.

கொள்ளு பயிரை எவ்வித நோயும் தாக்காததால் அதற்கு மருந்து அடிக்க வேண்டியது இல்லை. மிக குறைந்த தண்ணீர் வசதியிலும், பணி ஈரத்திலே கொள்ளு செழித்து வளரும். விதைத்த, 70 முதல், 80 நாட்களில் கொள்ளு பயிரை அறுவடை செய்யலாம். தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொள்ளு அறுவடை துவங்கி நடந்து வருகிறது.

கடந்த ஆண்டு, ஒரு கிலோ கொள்ளு பருப்பின் விலை, 30 ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு அறுவடையின் துவக்கத்தில், ஒரு கிலோ கொள்ளுபருப்பின் விலைக 30 ரூபாய் விற்பனை செய்யப்படுகிறது. இதன் விலை உயர வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சிடைந்துள்ளனர்.

ஒரு ஏக்கரில்க 500 கிலோ கொள்ளு பருப்பு எடுக்க முடியும். இதன் மூலம் ஏக்கருக்கக 10 ஆயிரம் முதல்க 15 ஆயிரம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது.இதுனால் கொள்ளு பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## நிவாரணத்தொகை வழங்க வங்கி கணக்கு சேகரிப்பு

**தேவதானப்பட்டி**: சூறாவளியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, அவர்களின் வங்கி கணக்கு எண்களை வருவாய்த்துறையினர் பெற்று வருகின்றனர்.

கடந்த 2013 ஏப்ரல், மே மாதங்களில் ஓரிரு நாட்கள் சூறாவளிக் காற்றுடன் மழை பெய்தது. அப்போது மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வாழை, கரும்பு, வெற்றிலைக் கொடி, தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டன. பாதிப்பு குறித்த

விபரங்களை வருவாய்த்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்து, சேதமதிப்பு குறித்த விபரங்களை சேகரித்து அரசுக்கு அனுப்பி வைத்தனர். இந்நிலையில், புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்காக தாலுகா வாரியாக பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது.
இந்த பட்டியல் மூலம் கிராமம் வாரியாக நிவாரணம் பெறும் விவசாயிகளிடம், வி.ஏ.ஓ.க்கள் வங்கி கணக்கு எண்களை பெற்று வருகின்றனர். இதன் மூலம் விவாரணத் தொகை விவசாயிகள் பெயரில் வங்கியில் செலுத்தப்பட உள்ளது.

## காய்கறி விலை பாதியாக குறைவு

**பெரியகுளம்**: பெரியகுளம் பகுதியில் காய்கறி விளைச்சல் அதிகரித்துள்ளதாலும், கோயில் திருவிழாக்கள் நிறைவு பெற்றுள்ளதாலும், காய்கறி விலை குறைந்துள்ளது. பெரியகுளம் தாலுகா பகுதிகளான ஜல்லிபட்டி, குள்ளப்புரம் உட்பட பல பகுதிகளில் காய்கறிகள் விளைச்சல் அதிகரித்துள்ளது. போதுமான மழை இல்லாத நிலையிலும், கிணற்று பாசனத்தின் மூலம் காய்கறிகள் விளைச்சல் உள்ளது. மானாவாரி, தோட்டக்கலை பகுதிகளில் கத்திரிக்காய், பச்சைமிளகாய், தக்காளி, பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகள் விளைச்சல் அடைகின்றது.
கடந்த மாதம், ஒரு கிலோ 30 ரூபாயக்கு விற்ற கத்தரிக்காய் தற்போது 15 ரூபாய்க்கும், 40க்கு விற்ற பீன்ஸ் 20க்கும், 15 க்கு விற்ற தக்காளி 6 க்கும், 30 க்கு விற்ற பச்சை மிளகாய் 15 க்கும், 25க்கு விற்ற அவரை 10க்கும், 40க்கு விற்ற உருளை கிழக்கு 25க்கும், 20க்கு விற்ற நூக்கல் 15க்கும், 50க்கு விற்ற காரட் 20க்கும், 40 க்கு விற்ற சேனைக்கிழங்கு 30க்கும் அனைத்து காய்கறிகளின் விலைகளும் வாங்கும் விலையாக குறைந்துள்ளது.
100, 80 என மூன்று டிஜிட் விலையில் விற்ற பெரிய வெங்காயம், சின்னவெங்காயம் கிலோ 20க்கு விற்கிறது. கோயில் திருவிழா சீசன் முடிந்ததாலும், வரத்தும் அதிகரித்துள்ளதாலும், அனைத்து காய்கறிகளின் விலை குறைந்துள்ளது. இதனால் இல்லத்தரசிகள் ஆர்வமுடன் காய்கறிகளை வாங்கி செல்கின்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் நீர்மட்டம் 51 அடி



மேட்டூர் : மேட்டூர் அணை நீர்மட்டம் 51.47 அடியாக உள்ளது.மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து நேற்று முன்தினத்தை விட சற்று அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் 234 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 8 மணி நிலவரப்படி விநாடிக்கு 303 கனஅடியாக அதிகரித்தது. அணையில் இருந்து பாசனத்திற்கு விநாடிக்கு 2 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விடப்பட்டது. நீர்மட்டம் 51.47 அடியாக உள்ளது. நீர் இருப்பு 18.75 டிஎம்சி.

### வரத்து அதிகரிப்பால் தக்காளி விலை குறைவு



அரூர்: தர்மபுரி மாவட்டம் அரூர், கோபிநாதம்பட்டி கூட்ரோடு, பொம்மிடி, மொரப்பூர், கம்பைநல்லூர், இருமத்தூர், ஒடசல்பட்டி கூட்ரோடு உள்ளிட்ட

இடங்களில் 20க்கும் மேற்பட்ட தக்காளி மண்டிகள் செயல்பட்டு வருகிறது. இந்த பகுதி விவசாயிகளிடம் கொள்முதல் செய்து, பெட்டிகளில் அடுக்கி சென்னை, பெங்களூர், கோவை, புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளுக்கு வியாபாரிகள் விற்பனைக்கு அனுப்புகின்றனர்.கடந்த வாரத்தில் 25 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது, ஒரு கூடை தக்காளி ரூ50 முதல் ரூ.55 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. தக்காளி வரத்து அதிகரித்ததை தொடர்ந்து தக்காளி விலை குறைந்துள்ளது. சில்லரை விலையில் கிலோ ரூ.3 க்கு தக்காளி விற்பனை செய்யப்படுகிறது.

**10 டன் பச்சை பயறு வரத்து கிலோ ரூ.60க்கு விற்பனை**



போச்சம்பள்ளி: போச்சம்பள்ளி வாரச்சந்தையில் நேற்று 10 டன் பச்சை பயறு விற்பனையானது. இதில் ஒரு கிலோ ரூ.60 முதல் ரூ.65 க்கு விற்பனை செய்யப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வாரச்சந்தையில் விவசாயிகள் மூட்டை கணக்கில் பச்சைபயறு கொண்டு வந்தனர். சந்தைக்கு கிருஷ்ணகிரி, தர்மபுரி, இருமத்தூர், சேலம், ஓமலூர் போன்ற பகுதியில் இருந்து வியாபாரிகள் வந்திருந்தனர். அவர்கள், விவசாயிகளிடம் ஒரு கிலோ பச்சைப் பயறு முதல் ரகம் ரூ.65க்கும், இரண்டாம் ரகம் ரூ.60க்கும் வாங்கி சென்றனர். நேற்றைய சந்தையில் சுமார் 10 டன் பச்சை பயறு விற்பனை செய்யப்பட்டது.

**பழநி மார்க்கெட்டில் குவியும் ஆந்திரா தக்காளி கிலோ ரூ.3க்கு விற்பனை**



பழநி: பழநி காந்தி மார்க் கெட்டிற்கு ஆந்திரா தக்காளிகளின் வரத்து அதிகரித்து உள்ளதால் கிலோ ஸி3க்கு விற்பனை செய்யப்படுகிறது. அனைத்து வகை காய்கறிகள் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். பழநி நகராட்சியை சுற்றிலும் 80க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இந்த கிராம மக்களின் முக்கிய தொழில் விவசாயம். நெல், கரும்பு மற்றும் வாழை ஆகியவற்றிற்கு அடுத்து முள்ளங்கி, வெண்டை, தக்காளி போன்ற காய்கறி வகைகளை பயிரிட்டு வந்தனர். இந்த பகுதியில் கடந்த 2 ஆண்டுகளாக வறட்சி நிலவி வருகிறது.

அதனால் குறைந்த தண்ணீரில் விளையக்கூடிய காய்கறி பயிர்களை விளைவிப்பதில் விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். இவர்கள் நடவு செய்த தக்காளி தற்போது அறுவடைக்கு வந்துள்ளது. அதனால் பழநி காந்தி மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து அதிகரித்து உள்ளது. இந்த நிலையில் ஆந்திராவில் இருந்தும் தக்காளி உள்ளிட்ட காய்கறிகள் காந்தி மார்க்கெட்டிற்கு அதிக அளவில் வரத் தொடங்கி உள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு கிலோ ரூ.30க்கு விற்பனை செய்யப்பட்ட தக்காளி தற்போது ரூ.3க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிலோ ரூ.32க்கு விற்பனையான கேரட் கிலோ ரூ.20க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிலோ ரூ.40க்கு விற்பனை செய்யப்பட்ட உருளைக் கிழங்கு கிலோ ரூ.26க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரூ.70க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த சின்ன வெங்காயம் கிலோ ரூ.20க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கிலோ ரூ.60க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த பச்சை மிளகாய் ரூ.19க்கு விற்பனையாகிறது. இதுகுறித்து வியாபாரி யூசூப் கூறியதாவது: ''ஆந்திராவில் இருந்து தக்காளி வரத்து அதிகரித்து உள்ளது. அதனால் தக்காளி அதிகபட்சமாக கிலோ ஸி3க்கு விற்பனை செய்யப்படுகிறது. காய்கறிகளின் வரத்து அதிகம் இருப்பதால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது என்றார்.

தர்மபுரி மாவட்டத்திலும் விலை குறைவு: தர்மபுரி மாவட்டம் அரூர், கோபிநாதம்பட்டி கூட்ரோடு, பொம்மிடி, மொரப்பூர், கம்பைநல்லூர், இருமத்தூர், ஒடசல்பட்டி கூட்ரோடு உள்ளிட்ட இடங்களில் 20க்கும் மேற்பட்ட தக்காளி மண்டிகள் செயல்பட்டு வருகிறது. இங்கு கடந்த வாரத்தில் 25 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்டது.

தற்போது, ஒரு கூடை தக்காளி ரூ.50 முதல் ரூ.55 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. தக்காளி வரத்து அதிகரித்ததை தொடர்ந்து தக்காளி விலை குறைந்துள்ளது. சில்லரை விலையில் கிலோ ரூ.3 க்கு தக்காளி விற்பனை செய்யப்படுகிறது.

**1,200 மூட்டை மஞ்சள் ரூ.60 லட்சத்திற்கு ஏலம்**



திருச்செங்கோடு: நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு 1200 மஞ்சள் மூட்டை விற்பனைக்கு வந்தது. சாகுபடி அதிகரித்துள்ளதால், புதிய மஞ்சள் அதிகமாக ஏலத்திற்கு வந்தது. ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய

பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சளைக் கொண்டு வந்திருந்தனர். புதிய மஞ்சள் வந்ததையொட்டி, ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் சங்க தலைவர் ரவி சங்கர் தலைமையில் சிறப்பு பூஜை நடந்தது. இதில் விவசாயிகள், வணிகர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நேற்றைய ஏலத்தில் 1200 மூட்டை மஞ்சள் ரூ.60 லட்சத்திற்கு விற்பனையானது. இதில் விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.6,500 முதல் ரூ.7,658 வரை விலை போனது. கிழங்கு ரகம் ரூ.5,560 முதல் ரூ.6,559 வரை விலை போனது. பனங்காளி ரகம் ரூ.9ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரத்து 60 வரை விற்பனையானது. மஞ்சளுக்கு ரூ.1000 முதல் ரூ.1,500 வரை கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**காஷ்மீரில் பனி நீடிக்கிறது**



ஸ்ரீநகர் : ஜம்மு-காஷ்மீர் தலைநகரமான ஸ்ரீநகர் பகுதியில், நேற்று முன்தினம் இரவு 0.6 டிகிரி செல்சியஸ் பதிவானது, நேற்று குறைந்து 0.9 டிகிரி செல்சியஸ் பதிவானது. அதே போன்று குவாசிகன்ட் பகுதியில் மைனஸ் 0.9 டிகிரி பதிவானது.தென் காஷ்மீரில் கோக்ர்நாக் பகுதியில் குறைந்து மைனஸ் 1.8 டிகிரி செல்சியஸ் நிலவியது. சுற்றுலா பகுதியான பாகல்காமில் குறைந்து மைனஸ் 5.4 டிகிரின் செல்சியசாக பதிவானது. லே பகுதியில் குறைந்து மைனஸ் 12.4 டிகிரி செல்சியஸ் பதிவானது. கடும் குளிர், பனியால் மக்கள் பாதிப்பு அடைந்துள்ளனர். பனிப் பொழிவால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. இரவில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

**விவசாயிகள் குறைதீர்கூட்டம்**

திருச்சி, : திருச்சியில் வருகிறற 31ம் தேதி விவசாயிகள் குறைதீர் நாள் கூட் டம் நடை பெறுகிறது.

விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வருகிற 31ம் தேதி காலை 10.30 மணிக்கு திருச்சி மாவட்ட கலெக் டர் அலுவலகத்தில் கலெக் டர் ஜெயஸ்ரீ தலைமையில் நடை பெறுகிறது. கூட்டத் தில் விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு நீர்ப்பாச னம், வேளாண்மை, இடுபொருட்கள், வேளா ண்மை சம்மந்தப்பட்ட கடனுதவிகள், விவசாய மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் மற்றும் வேளா ண்மை தொடர்புடைய கடனுதவிகள் குறித்து நேரிலோ அல்லது மனுக் கள் மூலமாகவோ தெரிவிக்கலாம்.

திருச்சி மாவட்ட விவசாயிகள், விவசாய பிரதிநிதிகள் கலந்து கொள்ளு மாறு கலெக்டர் ஜெயஸ்ரீ கேட்டுக் கொண்டுள்ளார்.ரயிலில் ஓசி பயணம்

ரூ. 41,000 அபராதம்திருச்சி, : ரயில்க ளில் ஓசி பயணம் செய்தவர்களிடம் இருந்து ரூ.41 ஆயிரம் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

திருச்சி ஜங்ஷன் ரயில் நிலையத்தில் உதவி வணிக மேலாளர் மது தலைமை யில் டிக்கெட் பரிசோதகர் கள் 26 பேர் மற்றும் ரயில் வே பாதுகாப்பு பிரிவு ஊழியர்கள் 16 பேர் நேற்றுமுன்தினம் ரயில்களின் அதிரடி பரிசோதனையில் ஈடுபட்டனர். அப்போது மன்னார்குடி -திருச்சி பய ணிகள் ரயில், மயிலாடு துறை-திருச்சி, திருச்சி-தஞ்சை, திருச்சி- காரைக்கால், கோவை-மயிலாடு துறை-கோவை ஜனசதாப்தி விரைவு ரயில், நாகர்கோயில்-மும்பை சிஎஸ்டி விரைவு ரயில், திருச்சி-சென்னை விரைவு ரயில் உள்ளிட்ட பல்வேறு ரயில்களில் வந்த பயணிகளிடம் டிக்கெட் பரி சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் டிக்கெட் இன்றியும், அளவுக்கு அதிகமான லக்கேஜ்களை கட்டணம் செலுத்தாமலும் கொண்டு வந்த வகையில் 132 பேரிடமிருந்து ரூ.41 ஆயிரத்து 80 அபராதம் வசூலிக்கப்பட்டது. இதே போன்ற சோதனை தொட ரும் என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நடப்பு ரபி பருவத்தில் இதுவரை பயிர்கள் சாகுபடி பரப்பளவு 6.35 கோடி ஹெக்டேரை எட்டியது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

**புதுடெல்லி**

நடப்பு ரபி பருவத்தில் (அக்டோபர் – மார்ச்) இதுவரை பயிர்கள் சாகுபடி பரப்பளவு 6.35 கோடி ஹெக்டேரை எட்டியுள்ளது என விவசாய அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 6.03 கோடி ஹெக்டேராக இருந்தது.

<u>வேளாண் பணிகள்</u>

ரபி வேளாண் பணிகள் அக்டோபர் மாதத்தில் தொடங்கி மார்ச் மாதம் நிறைவடைகிறது. இப்பருவத்தில் கோதுமை, சிறு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவை பிரதானமாக பயிரிடப்படுகின்றன. ரபி பருவத்தில் இதுவரை அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் வித்துகள் சாகுபடி பரப்பளவு சென்ற

ஆண்டைக் காட்டிலும் அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டில் பருவமழை நன்றாக இருந்தது சாகுபடி பரப்பளவு விரிவடைந்ததற்கு முக்கிய காரணமாகும்.

இதுவரை பருப்பு சாகுபடி பரப்பளவு 1.56 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 1.49 கோடி ஹெக்டேராக இருந்தது. நெல் பயிரிடும் பரப்பளவு 10.70 லட்சம் ஹெக்டேரிலிருந்து 15 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

எண்ணெய் வித்துகள் சாகுபடி பரப்பளவு 88 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 85 லட்சம் ஹெக்டேராக இருந்தது. அதேசமயம், சிறு தானியங்கள் பயிரிடும் பரப்பளவு 61.90 லட்சம் ஹெக்டேரிலிருந்து 60 லட்சமாக குறைந்துள்ளது.

ரபி பருவத்தின் முக்கிய பயிரான கோதுமை சாகுபடி பரப்பளவு 6 சதவீதம் அதிகரித்து இதுவரை இல்லாத அளவிற்கு 3.14 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 2.96 கோடி ஹெக்டேராக இருந்தது.

தற்போதைய நிலவரங்களை பார்க்கும்போது நடப்பு வேளாண் பருவத்தில் (2013 ஜூலை – 2014 ஜூன்) கோதுமை உற்பத்தி புதிய சாதனை அளவாக 10 கோடி டன்னையும் தாண்டும் என தெரிகிறது. மேலும், மொத்த உணவு தானியங்கள் உற்பத்தி முந்தைய சாதனை அளவுகளை விஞ்சும் என மத்திய விவசாய துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார். 2011–12 பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி வரலாறு காணாத அளவிற்கு 25.93 கோடி டன்னாக உயர்ந்திருந்தது.

கோதுமை – பருப்பு

நடப்பு ரபி பருவத்தில் 9.25 கோடி டன் கோதுமை 1.20 கோடி டன் பருப்பு, 1.40 கோடி டன் அரிசி, 44 லட்சம் டன் மக்காச்சோளம் மற்றும் 15 லட்சம் டன் பார்தி உற்பத்தி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

**கடந்த 5 மாதங்களில் கோதுமை ஏற்றுமதி ஐந்து லட்சம் டன்**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

**புதுடெல்லி**

கடந்த ஐந்து மாதங்களில் 5 லட்சம் டன் உபரி கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதில் பெரும்பான்மையான பங்கு வங்காளதேசத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மேலும் மத்திய கிழக்கு மற்றும் கொரியா உள்ளிட்ட நாடுகளும் இந்திய கோதுமையை இறக்குமதி செய்துள்ளன.

அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளின் கோதுமை விலையை காட்டிலும் இந்திய கோதுமை விலை அதிகமாக இருந்த போதிலும் வங்காளதேசம் அதிகளவில் கோதுமையை இறக்குமதி செய்துள்ளது. சரக்கு போக்குவரத்து செலவினம் குறைவாக இருப்பதால் அந்நாடு இந்தியாவில் இருந்து கோதுமைய இறக்குமதி செய்துள்ளது. இதர நாடுகளில் இருந்து கோதுமை இறக்குமதி செய்தால் செலவினம் அதிகரிக்கும் என்பதை இதற்கு காரணமாகும்.

2013 ஆகஸ்டு மாதத்தில், 1 டன் கோதுமையை 300 டாலர் அடிப்படை விலையில் 20 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய பொதுத்துறை நிறுவனங்களான எஸ்.டி.சி., எம்.எம்.டி.சி. மற்றும் பி.ஈ.சி. ஆகியவற்றிற்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. பின்பு 1 டன் கோதுமைக்கான அடிப்படை விலையை 260 டாலராக குறைத்தது.

இதுவரை மத்திய அரசு 10 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதிக்கான ஒப்பந்தங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. இதில் 5 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதியும் ஏற்றுமதி செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டையின் சராசரி கொள்முதல் விலை 339 காசுகள்**



நாமக்கல் மண்டலத்தில் கடந்த ஆண்டு முட்டையின் சராசரி கொள்முதல் விலை 339 காசுகள் ஆகும். இது 2012–ம் ஆண்டை ஒப்பிடும் போது 47 காசுகள் அதிகமாக உள்ளது.

**3½ கோடி முட்டை உற்பத்தி**

நாமக்கல் மண்டலத்தில் 1100–க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இவற்றின் மூலம் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 3½ கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. தொழிலில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக கடந்த சில மாதங்களாக இது குறைந்து கொண்டே வருகிறது. கடந்த 8 மாதங்களில் மட்டும் ஏறத்தாழ 28 லட்சம் முட்டைகள் வரை உற்பத்தி குறைந்து உள்ளது.

இது ஒருபுறம் இருக்க முட்டையின் கொள்முதல் விலை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டே வருகிறது. கடந்த 2007–ம் ஆண்டு நாமக்கல் மண்டலத்தில் முட்டையின் சராசரி கொள்முதல் விலை 177 காசுகள் ஆகும்.

339 காசுகளாக உயர்வு

அது 2009–ம் ஆண்டு 225 காசுகளாகவும், 2010–ம் ஆண்டு 249 காசுகளாகவும், 2011–ம் ஆண்டு 253 காசுகளாகவும், 2012–ம் ஆண்டு 292 காசுகளாகவும் உயர்ந்து உள்ளது. கடந்த ஆண்டு மேலும் 47 காசுகள் உயர்ந்து 339 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

இந்த விலை உயர்வுக்கு தீவன மூலப்பொருட்களின் விலை ஏற்றம், முட்டை உற்பத்தி குறைவு போன்றவை முக்கிய காரணமாக கூறப்படுகிறது. இது தவிர பண்ணை பராமரிப்பு செலவு அதிகரிப்பு, காய்கறி விலை உயர்வு போன்றவையும் காரணங்களாக கூறப்படுகிறது.

**பாப்பிரெட்டிப்பட்டி அருகே வாணியாறு அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு அமைச்சர் பி.பழனியப்பன் மலர் தூவினார்**



பாப்பிரெட்டிப்பட்டி வாணியாற்றில் இருந்து பாசனத்திற்கு தண்ணீரை திறந்து வைத்து அமைச்சர் பி.பழனியப்பன், கலெக்டர் விவேகானந்தன் உள்ளிட்டோர் மலர் தூவிய போது எடுத்த படம்.

**பொம்மிடி,**

பாப்பிரெட்டிப்பட்டி வாணியாறு அணையில் இருந்து இடது மற்றும் வலதுபுற கால்வாய்கள் வழியாக பாசனத்திற்கு தண்ணீரை அமைச்சர் பி.பழனியப்பன் திறந்து வைத்து மலர் தூவினார். இதன்மூலம் அந்த பகுதியில் 10 ஆயிரத்து 517 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

வாணியாறு அணை

தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுபடி தர்மபுரி மாவட்டம், பாப்பி ரெட்டிப்பட்டி வாணியாறு அணையில் இருந்து பாசனத் திற்குத் தண் ணீர் திறந்து விடும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு கலெக்டர் விவே கானந்தன் தலைமையில் உயர்கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் கலந்து கொண்டு தண்ணீரை திறந்து வைத்து மலர் தூவினார்.

அப்போது அமைச்சர் கூறிய தாவது:-

தர்மபுரி மாவட்டம், பாப்பி ரெட்டிப்பட்டி வட்டம் வாணி யாறு நீர்த்தேக்க ஆயக்கட்டு தாரர்களின் வேண்டுகோளுக் கிணங்க வாணியாறு நீர்த் தேக்கத்தில் இருந்து 2013- 2014-ம் ஆண்டுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புதிய ஆயக்கட்டு பாச னப்பரப்பான 8 ஆயிரத்து 550 ஏக்கர் நிலங்களும், பழைய ஆயக்கட்டு பாசனப் பரப்பான ஆயிரத்து 967 ஏக்கர் நிலங் களும் பாசன வசதி பெறும். அணையில் தற் போதைய நீர் இருப்பை கொண்டு புதிய ஆயக்கட்டு பாசனப்பகுதிக ளான வலது புற கால்வாயில் வினாடிக்கு 50 கனஅடி வீத மும், இடதுபுற கால்வாயில் வினாடிக்கு 45 கனஅடி வீத மும் தண்ணீர் திறந்து விடப் பட்டுள்ளது.

10,517 ஏக்கர் நிலம்

புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு இடது மற்றும் வலது புறக்கால்வாய்களில் ஒவ்வொரு கால்வாயிலும் 2 மண்டலங்களாக பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் 6 நாட்கள் வீதம் 12 நாட் களுக்கு ஒரு நனைப்பிற்கு தண்ணீர் வழங்கப்படும். மேலும் பழைய ஆயக்கட்டு பாசனப்பகுதிகளான வெங் கடசமுத்திரம் ஏரி, ஆலா புரம் ஏரி, பறையப்பட்டி ஏரி, ஒந்தியாம்பட்டி ஏரி, தென் கரைக் கோட்டை ஏரிகளுக்கு ஒரு முறை தண்ணீர் வழங்கப் படும்.

இதன் மூலம் பாப்பிரெட் டிப்பட்டி வட்டம் மோளை யானூர், கோழிமேக்கானூர், பாப்பிரெட்டிப்பட்டி, அதிகா ரப்பட்டி, ஆலாபுரம், மருக் காலம்பட்டி, கவுண்டம்பட்டி, புதுப்பட்டி, வெங்கடசமுத்தி ரம், தேவராஜ பாளையம், மெணசி, பூதநத்தம், தென் கரைக்கோட்டை, ஜம்மன ஹள்ளி, பறையப் பட் டிபுதூர், நாச்சினாம்பட்டி, சின்னாங் குப்பம் உள்ளிட்ட 20 கிராமங் களை சேர்ந்த 10 ஆயிரத்து 517 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். விவசாயிகள், பொதுமக்கள் பொதுப் பணித் துறையினரு டன் ஒத்துழைத்து தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெறும் நோக்குடன் செயல்பட வேண் டும்.

இவ்வாறு அமைச்சர் கூறி னார்.

நிகழ்ச்சியில் கே.பி. அன்பழ கன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் அன்பழகன், பொதுப் பணி த்துறை செயற்பொறியாளர் ஜெகநாதன், அரூர் உதவி கலெக்டர் சந்திரசேகரன், ஒன் றியக் குழுத் தலைவர் முருகன், துணைத் தலைவர் ராஜேந்தி ரன், ஊராட்சி மன்றத் தலை வர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பாசன சங்க நிர்வாகிகள், வரு வாய், பொதுப் பணி, வேளாண் உள்ளிட்ட பல்வேறு துறை களை சேர்ந்த அலுவலர், உள் ளாட்சி, கூட்டுறவு அமைப்பு களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

**கரூரில் தோட்டக்கலை பயிர்களில் அறுவடை பின்சார் சந்தை படுத்துதல் கருத்தரங்கம்**

கரூரில், தோட்டக்கலை பயிர்களில் அறுவடை பின்சார் மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றிய மாநில அளவிலான கருத்தரங்கம் நடந்தது.

<u>கருத்தரங்கம்</u>

கோவை தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் மற்றும் கரூர் மாவட்ட தோட்டக்கலை துறையும் இணைந்து தோட்டக்கலை பயிர்களில் அறுவடை பின்சார் மற்றும் சந்தை படுத்துதல் பற்றிய கருத்தரங்கை கரூரில் நடத்தியது.

தாந்தோணி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சொர்ண மாணிக்கம் கலந்து கொண்டு மத்திய-மாநில அரசின் மூலம் தோட்டக் கலைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி விவசாயி களுக்கு விளக்கி கூறினார்.ஆராய்ச்சி நிலையத்தின் பங்கு

தொழில் நுட்ப வல்லுநர் ஞானசுந்தரம் தோட்டக்கலை பயிர்களில் அறுவடைக்கு பின்சார் மற்றும் மதிப்பு கூட்டுதலில் தேசிய தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பங்கு பற்றி விரிவாக விளக்கினார்.

இதேபோல் வெங்காய பயிரில் அறுவடைக்கு பின்சார் தொழில் நுட்பங்கள் பற்றிய விரிவான விளக்கத்தை திருச்சி மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உதவி பேராசிரியர் அசோகன் விளக்கினார்.

முருங்கையில் அறுவடைக்கு பின்சார் தொழில் நுட்பங்கள் மற்றும் சந்தைபடுத்துதல் என்னும் தலைப்பின் கீழ் முருங்கை சாகுபடியின் முக்கியத்துவம், சாகுபடி தொழில் நுட்பங்கள், அறுவடைக்கு பின்சார் தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல் பற்றிய விரிவான கருத்துக்களை திருச்சி மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் அருள்மொழியன் விவசாயி களுக்கு விளக்கி கூறினார்.

<u>குளிர்சாதனமுறையில் பதப்படுத்துதல்</u>

திருச்சி மகளிர் தோட்டக் கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் ஜெகதீசன், தக்காளி மற்றும் கொடி வகைப்பயிர்களில் அறுவடை பின்சார் தொழில் நுட்பம் மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றியும், உதவி பேராசிரியர் நித்யாதேவி தோட்டக்கலை பயிர்களை குளிர்சாதன முறையில் பதப்படுத்துதல் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி விரிவான விளக்கங்களை விவசாயிகளுக்கு கூறினர்.

பழப்பயிர்களான மா மற்றும் நெல்லியில் அறுவடை பின்சார் தொழில் நுட்பம் பற்றி திருச்சி மகளிர் தோட்டக் கலை கல்லூரியின் உதவி பேராசிரியர் வித்யாவும், தென்னையில் அறுவடை பின்சார் தொழில் நுட்பம் மற்றும் சந்தைபடுத்துதல் பற்றி ஈஸ்வரன் ஆகியோர் விவசாயி களுக்கு விளக்கி கூறினர்.

**விலை உயர்வால் ரஸ்தாளி வாழை தார் ரூ.600–க்கு விற்பனை**



**நொய்யல்,**

விலை உயர்வால் ரஸ்தாளி வாழைத்தார் ரூ.600–க்கு விற்பனை யானது.

<u>பல்வேறு வகையான வாழைத்தார்</u>

கரூர் மாவட்டம் நொய்யல், மரவாபாளையம், புங்கோடை, சேமங்கி முத்தனூர், கோம்புபாளையம், தவுட்டுப்பாளையம், திடுக்காடுதுறை, என்.புகழூர் உள்ளிட்ட பல்வேறு பகுதி களில் விவசாயிகள் ஆயிரக் கணக்கான ஏக்கரில் பூவன், கற்பூரவள்ளி, ரஸ்தாளி, பச்ச நாடன், மொந்தன் உள்ளிட்ட பல்வேறு வகையான வாழைகளை பயிரிட்டுள் ளனர்.

இந்த பகுதிகளில் விளையும் வாழைத்தார்களை விவசா யிகள் உள்ளூர் பகுதிகளில் உள்ள கடைகளுக்கும், வாழைத்தார் வியாபாரி களுக்கும் விற்பனை செய் கின்றனர். பல விவசாயிகள் வியாபாரிகளிடம். தோட் டத்தில் உள்ள வாழைத் தார்களை ஒட்டு மொத்தமாக குத்தகைக்கு விட்டு விடுகின்றனர். வியாபாரிகள் குத்தகைக்கு வாங்கிய வாழைத்தார்களை வெட்டி தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு

பகுதிகளுக்கும், ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பி வைக் கின்றனர்.

<u>விலை உயர்ந்தது</u>

கடந்த வாரம் பூவன் வாழைத்தார் ரூ.400–க்கும், கற்பூரவள்ளி ரூ.350–க்கும் ரஸ்தாளி ரூ.450–க்கும் விற்பனையானது.

நேற்று விலை உயர்வால் பூவன் வாழைத்தார் ரூ.500–க்கும், கற்பூரவள்ளி ரூ.450–க்கும், ரஸ்தாளி ரூ.600–க்கும் விற்பனை ஆனது.

வாழைத்தார் உற்பத்தி குறைவாக இருப்பதாலும், பல்வேறு பகுதிகளில் திருவிழா நடைபெற்று வருவதாலும் வாழைத்தார் விலை உயர்ந்து விட்டது. வாழைத்தார்களின் விலை உயர்வால் வாழை பயிரிட் டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டில் மல்லிகைப்பூ கிலோ ரூ.1,200க்கு விற்பனை**



**மதுரை,**

மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டில் மல்லிகைப்பூ கிலோ விலை இருமடங்கு அதிகரித்து நேற்று ரூ.1,200–க்கு விற்பனையானது. கடந்த வாரம் ரூ.400–ல் இருந்து ரூ.650 வரை விற்பனையான மல்லிகைப்பூ நேற்று ஒரே நாளில் ரூ.1,200

என அதிகரித்தது. வரத்து குறைவின் காரணமாக மல்லிகைப்பூவிற்கு கடும் தட்டுப்பாடு நிலவியது.

அதேபோன்று கனகாம்பரம் விலை இரண்டு மடங்கு உயர்ந்து நேற்று ஒரு கிலோ 800 ரூபாய்க்கும், பிச்சிப்பூ கிலோ ரூ.500–க்கும், முல்லைப்பூ ரூ.500 முதல் ரூ.800 வரையும் விற்பனையாயின.

கடந்த சில வாரங்களாக பெங்களூர் ரோஸ் வரத்து வெகுவாக குறைந்துள்ளது. இருந்தபோதிலும் அதன்விலை சராசரியாகவே உள்ளது. நேற்று ஒரு கட்டு (20 பூக்கள் கொண்டது) ரூ.120 முதல் ரூ.150 வரை விற்பனையானது.

இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது:–

தற்போது மல்லிகைப்பூ சீசன் கிடையாது. அதனால் அதன் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது. கடந்த சில நாட்களாக மல்லிகை கிலோ ரூ.400 முதல் ரூ.600 வரை விற்பனையாகி வந்தது. இன்று வரத்து குறைவின் காரணமாகவே இருமடங்கு அதன் விலை அதிகரித்தது.

அதேபோன்று பிச்சிப்பூ, முல்லை, கனகாம்பரம் உள்ளிட்ட பூக்களின் விலையும் இரண்டு மடங்காக அதிகரித்து உள்ளது. ஒவ்வொரு வாரத்தின் சனிக்கிழமையன்று இங்கிருந்து கேரள வியாபாரிகள் பூக்களை டன் கணக்கில் வாங்கிச் செல்கின்றனர். இதன்காரணமாக அன்று வழக்கமான விலையைக் காட்டிலும் சற்று அதிகரித்து தான் பூக்களின் விலை நிலவரம் காணப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

**வாழை, மிளகாய் பயிர்களுக்கு காப்பீடு செய்யலாம் தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர்தகவல்**



**சிவகங்கை,**

வாழை, மிளகாய் பயிர்களுக்கு காப்பீடு செய்யலாம் என்று தோட் டக்கலைத்துறை துணை இயக்குனர் தெரி வித்துள்ளார்.

பயிர் காப்பீடு

சிவகங்கை மாவட்ட தோட் டக்கலைத்துறை துணை இயக் குனர் இருளப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதா வது:–

சிவகங்கை மாவட்டத்தில் ஆண்டுதோறும் சராசரியாக வாழைப்பயிர் 500 ஹெக்டேர் பரப்பிலும், மிளகாய் பயிர் 3 ஆயிரத்து 500 ஹெக்டேர் பரப்பிலும் சாகுபடி செய்யப் பட்டு வருகிறது. இந்த பயிர் வறட்சி, வெள்ளம், நோய் தாக்குதல் போன்றவைகளால் பாதிக்கப்பட்டு பயிர் விளைச் சல் குறையும்போது, ஏற்படும் இழப்பினை ஈடுகட்ட வேளாண்மை காப்பீட்டு நிறுவனத்தின் மூலமாக பயிர் இன்சூரன்ஸ் செய்யப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு ராபி பருவதில் பயிரிடப்பட்டுள்ள வாழை மற்றும் மிளகாய் பயிர்களுக்கு இன்சூரன்ஸ் செய்யப்பட உள்ளது. தற்போது, வாழை பயிர்களுக்கு மானாமதுரை, இளையான்குடி, திருப்புவனம் தாலுகாக்களில் 14 வருவாய் கிராமங் களிலும், மிளகாய் பயிர்க்கு இளையான்குடி, காளை யார்கோவில், திருப்புவ னம்,

எஸ்.புதூர் ஆகிய வட்டா ரங்களில் 56 வருவாய் கிராம பகுதிகளிலும் பயிர் இன் சூரன்ஸ் செய்யப்பட உள்ளது.

இதன்படி வாழை பயிருக்கு ஒரு ஏக்கருக்கு அதிகபட்ச இழப்பீடாக ரூ.3 லட்சத்து 69 ஆயிரத்து 700 வழங்கப்படும். இதற்கு பிரிமியமாக மானியம் போக ரூ.11 ஆயிரத்து 93 செலுத்த வேண்டும். இது போல் மிளகாய் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.10ஆயிரத்து 855 இழப்பீடு வழங்கப்படும். இதற்கு அரசு மானியம் போக பிரிமியமாக ஒரு ஏக்கருக்கு ரூ.651 செலுத்த வேண்டும்.

கடைசிநாள்

மிளகாய் பயிருக்கு இன்சூரன்ஸ் செய்ய வருகிற 31–ந்தேததிகடைசிநாளாகும். வாழைப்பயிருக்கு பிரிமியம் செலுத்த பிப்ரவரி 28–ந்தேதி கடைசிநாள் ஆகும்.பயிர் காப் பீடு செய்ய விரும்பும் விவசாயி கள் தாங்கள் கணக்கு வைத் துள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கி அல்லது கூட்டுறவு வங்கிகளின் மூலமாக இந்த பிரிமிய தொகையை செலுத்த லாம்.

அவ்வாறு செலுத்தும் போது, பயிர் செய்துள்ளதற் கான ஆதாரத்தையும் சமர் பிக்க வேண்டும். இதுதொடர் பான மேலும் விவரங்களை தங்கள் பகுதி வட்டார தோட்டக்கலைத்துறை அலுவ லகங்களில் தெரிந்து கொள்ள லாம். எனவே விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன் படுத்தி கொள்ளவேண்டும்.

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

**வறட்சி பாதிப்பு குறித்து புள்ளிவிவரம் சேகரிக்கும் பணி கலெக்டர் ம.ரவிகுமார் தகவல்**



**தூத்துக்குடி,**

தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சியால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து புள்ளி விவரம் சேகரிக்கும் பணி நடந்து வருகிறது என்று மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் கூறினார்.

குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் முத்து, வேளாண்மை இணை இயக்குனர் தட்சிணாமூர்த்தி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

புள்ளிவிவரம்

கூட்டத்தில், கலெக்டர் ம.ரவிகுமார் பேசும் போது, தூத்துக்குடி மாவட்டத்தில் சராசரி மழை அளவு 662 மில்லி மீட்டர் ஆகும். 2013–ம் ஆண்டு 384.09 மில்லி மீட்டர் மழை பெய்து உள்ளது. 2012–ம் ஆண்டு 439.36 மில்லி மீட்டர் மழை பெய்து இருக்கிறது. அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் 342 மில்லி மீட்டர் மழை பெய்து உள்ளது.

மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகளில் புள்ளி விவரங்கள் சேகரிக்கும் பணியில் வேளாண்மை துறை அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டத்தில் சிறுதானியங்கள் 70 ஆயிரம் எக்டரிலும், பாசிப்பயறு உள்ளிட்ட பயறு வகைகள் 54 ஆயிரம் எக்டர் பரப்பிலும், பயிரிடப்பட்டு உள்ளது. இதில் சேதம் அடைந்த பயிர்கள் குறித்து கணக்கெடுக்கப்பட்டு வருகிறது.

<u>பயிர் காப்பீடு</u>

கடந்த ஆண்டு பயிர் காப்பீடு திட்டத்தில் நெல் விவசாயிகள் 21 பேருக்கு காப்பீடு தொகை வந்து உள்ளது. மற்ற விவசாயிகளுக்கு 10 நாட்களுக்குள் காப்பீடு பணம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும், என்று கூறினார்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசும் போது, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். தூத்துக்குடியை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும், விவசாயிகள் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும், என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

கூட்டத்தில் உதவி கலெக்டர்கள் டாக்டர் விஜயகார்த்திகேயன் (கோவில்பட்டி), நாகஜோதி (தூத்துக்குடி), தமிழ்ராஜன் (திருச்செந்தூர்) மற்றும் அதிகாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சென்னையில் பிப்.2-ல் சிறு தானிய உணவுத் திருவிழா

சென்னை லயோலா கல்லூரியில் பிப்ரவரி 2-ல் சிறு தானிய உணவுத் திருவிழாவும், 'ஐம்பூத சுற்றுச்சூழல் விழா' எனும் தலைப்பில் கருத்தரங்கமும் நடைபெறுகின்றன.

பூவுலகின் நண்பர்கள், என்விரோ கிளப் ஆகிய அமைப்புகள், லயோலா கல்லூரியுடன் இணைந்து இந்த நிகழ்ச்சிகளை நடத்துகின்றன.

இது குறித்து பூவுலகின் நண்பர்கள் அமைப்பு வெளியிட்ட தகவலில், 'ஐம்பூதங்களின் அடிப்படையில் அமைந்தது வாழ்வு என்பதை தெளிந்து உணர்ந்திருந்தனர் நமது முதுமக்கள். உலகின் அனைத்து பாரம்பரிய மருத்துவத்தின் அடிப்படை இந்த ஐம்பூதங்களும்தான் என்கின்றன பல்வேறு நாகரீங்களைச் சேர்ந்த பழங்கால மருத்துவக்குறிப்புகள்.

தமிழ் தொன்ம வரலாற்றில் ஐம்பூதங்கள் குறித்த துல்லியமான புரிதல் இருந்ததை சங்க இலக்கியம் முதல் பாரதி வரை அறிய முடியும். இன்று அவை எந்த அளவில் தமிழ்சூழலில் பயன்படுத்தப்படுகிறது? நவீனகால மாற்றங்கள் அவற்றின் மீது செலுத்தியிருக்கும் தாக்கங்கள் என்னென்ன?

3000 வருட பாரம்பரியம் கொண்ட தமிழ் தொன்மத்தின் மகத்துவத்தை நினைவுப்படுத்துவதும் அதன் நவீன செயல்பாடுகளை குறித்து விவாதிப்பதுமே பூவுலகின் நண்பர்கள் ஒருங்கிணைக்கும் ஐம்பூதம் நிகழ்வின் நோக்கம்.

ஆதி தமிழ் பரப்பில் ஐம்பூதங்களின் நிலை தொடங்கி தற்கால தமிழ் சமூகத்தில் அவை எதிர்கொள்ளும் நெருக்கடிகள் வரை பேசவும் பகிரவும் விவாதிக்கவும்

கலந்துரையாடவும் தமிழின் முக்கியமான ஆய்வாளர்களும் எழுத்தாளர்களும் ஐம்பூதம் நிகழ்வில் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

ஐந்து திணைகளை இப்படி வரலாற்று நோக்கிலும் சமகால பார்வையிலும் வைத்து விவாதித்த ஐந்திணை விழா, நீரின் மகத்துவம் சொன்ன முந்நீர் விழவு போன்ற நிகழ்வுகளை தொடர்ந்து பூவுலகின் நண்பர்கள் ஒருங்கிணைக்கும் ஐம்பூதம் நிகழ்வும் வரலாற்றுப் பார்வையுடன் புதிய யுகத்தில் ஐந்து பொருண்மைகளும் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் முன் வைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழ் தொன்மத்தை கொண்டாடும் இந்த விழாவில் வழமை போல இசைக்கும் உணவுக்கும் முக்கிய பங்கு உண்டு. புத்தக அரங்குகள், புகைப்பட கண்காட்சிகள் தவிர தமிழ் பழங்குடியினரின் கலை நிகழ்வுகளும் ஐம்பூத விழாவில் இடம்பெறும். சூழல் குறித்த 20 புத்தகங்களும் அன்றைய நிகழ்வில் வெளியிடப்படும். நிகழ்வின் இறுதியாக சிறுதானிய பாரம்பரிய உணவு திருவிழாவிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.